## பிரதமருக்கு நிகரான 5 அடுக்கு பாதுகாப்பு!

# ரூ.4.5 கோடி ஆடம்பரத்தில் மேட்டூர் அணை திறப்பு!

## குறுவை பயிர்களை இழந்து தவிக்கும் டெல்டா விவசாயிகள் முதல்வர் விஜய்க்கு எதிராகக் குமுறல்!

சென்னை, செப். 3 -

**காவிரி டெல்டா விவசாயிகளின் வாழ்வாதாரமான மேட்டூர் அணை, வழக்கமான ஜூன் 12 தேதியைத் தவறவிட்டு, மிகத் தாமதமாக செப்டம்பர் 1ம் தேதி சம்பா சாகுபடிக்காகத் திறக்கப்பட்டது.**

**மேட்டூர் அணையை திறக்க முதல்வர் விஜய் நேற்று மேட்டூர் அணைக்குச் சென்றார். ஆனால் குறுவை சாகுபடியை இழந்து தவிக்கும் விவசாயிகளின் கவலையை பொருட்படுத்தாமல், முதல்வர் விஜய்யின் சில நிமிட வருகைக்காகச் செய்யப்பட்டுள்ள பல கோடி ரூபாய் மதிப்பிலான ஆடம்பரப் பாதுகாப்பு ஏற்பாடுகள் பொதுமக்களிடையேயும் விவசாய அமைப்புகளிடையேயும் கடுமையான விவாதத்தைக் கிளப்பியுள்ளன.**

பொதுவாக தென்மேற்குப் பருவமழை உரிய காலத்தில் கை கொடுக்கும் போது ஜூன் 12ல் மேட்டூர் அணை திறக்கப்படும்.

**தாமதமான திறப்பும் விவசாயிகளின் வேதனையும்**

ஆனால், நடப்பாண்டில் பருவமழை தாமதம் மற்றும் கர்நாடக அணைகளில் இருந்து போதிய நீர் கிடைக்காத காரணத்தால் குறுவை சாகுபடிக்கான பாசனம் முழுமையாகக் கைவிடப்பட்டது. முக்கியமாக தமிழக அரசு சரியாக வாதிட்டு தண்ணீரை கர்நாடகாவிடம் இருந்து பெறாததும் காவிரியில் தண்ணீர் வராமல் போனதற்கு காரணம்.

பல லட்சம் ஏக்கர் குறுவை பரப்பளவை இழந்து விவசாயிகள் பெரும் பொருளாதார இழப்பைச் சந்தித்துள்ளனர். தற்போது கர்நாடக நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் பெய்த மழையால் நீர் இருப்பு உயர்ந்து, செப்டம்பர் மாதத் தொடக்கத்தில் சம்பா சாகுபடிக்காக அணை திறக்கப்பட்டது.

தாமதமாகத் திறக்கப்படும் நீரைக் கொண்டு குறுகிய கால சம்பா சாகுபடியை எப்படி ஈடுகட்டப் போகிறோம் என்ற பதற்றத்தில் டெல்டா உழவர்கள் இருக்கின்றனர்.



பல கோடி செலவில் வைக்கப்பட்ட இரும்பு வேலிகள்!

**முதல்முறை இப்படி**

கடந்த வருடங்களில் எப்போது மேட்டூர் திறக்கப்பட்டது. 2021: ஜூன் 12 (வழக்கமான நாளில் திறக்கப்பட்டது). 2022: மே 24 (வரலாற்றிலேயே முதல்முறையாக முன்கூட்டியே திறக்கப்பட்டது). 2023: ஜூன் 12 (வழக்கமான நாளில் திறக்கப்பட்டது). 2024: ஜூன் 12 அன்று திறக்கப்படவில்லை (நீர் இருப்பு பற்றாக்குறையால் ஜூலை 28 அன்று தாமதமாகத் திறக்கப்பட்டது). 2025: ஜூன் 12 (வழக்கமான நாளில் திறக்கப்பட்டது).

இப்போது 2026ல் ஜூன் 12 அன்று குறுவைக்காகத் திறக்கப்படவில்லை (போதிய நீர்வரத்து இல்லாததால் குறுவை பாசனம் கைவிடப்பட்டு, செப்டம்பர் 1 அன்று சம்பா சாகுபடிக்காகத் திறக்கப்பட்டது.

**சில நிமிட நிகழ்வுக்கு ரூ.4.5 கோடி இரும்புத் தடுப்புகளா?**

இத்தகைய இக்கட்டான சூழலில், முதல்வர் மேட்டூர் அணையின் மதகுகளை இயக்கி மலர் தூவும் சில நிமிட சடங்குக்காக அரசு நிர்வாகம் மேற்கொண்டுள்ள ஏற்பாடுகள் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன.

பிரதமரின் வருகைக்கான நெறிமுறைகளுக்கு நிகராக 5 அடுக்கு பாதுகாப்பு வளையம் அமைக்கப்பட்டது. முதலமைச்சரின் வருகைக்காக ஸ்பெஷல் தளம், அணை வளாகம் மற்றும் அவர் செல்லும் வழித்தடங்களில் லட்சக்கணக்கான மக்கள் திரள்வதைத் தடுக்க பிரம்மாண்ட இரும்புத் தடுப்புகள் அமைக்கப்பட்டிருந்தன.

**இதெல்லாம் தேவையா?**

இந்த இரும்புத் தடுப்பு வேலைகளுக்கு மட்டுமே அரசு கஜானாவிலிருந்து சுமார் ரூ.4.5 கோடி வரை செலவிடப்படுவதாக வெளியாகி உள்ள தகவல்கள் விவசாயிகளை அதிருப்தியில் ஆழ்த்தியுள்ளன.

தண்ணீர் திறக்கும் நிகழ்வுக்கு செலவிடப்படும் பல கோடி ரூபாய் நிதியை, போர்க்கால அடிப்படையில் டெல்டா மாவட்டங்களின் கடைமடை வாய்க்கால்களைத் தூர்வாருவதற்கும், பாசனக் கட்டமைப்புகளைச் சீரமைப்பதற்கும் பயன்படுத்தியிருக்கலாம் என்ற குரல்கள் வலுத்து வருகின்றன.

குறுவை பயிர்களை இழந்து தவிக்கும் உழவர்களுக்கு உரிய நிவாரணம் வழங்குவதிலும், உரங்கள் மற்றும் விதைகள் தடையின்றி கிடைப்பதை உறுதி செய்வதிலும்தான் அரசு கூடுதல் கவனம் செலுத்தியிருக்க வேண்டும்.

மக்கள் வரிப்பணத்தில் குறுகிய நேரப் பொது நிகழ்வுக்காகச் செய்யப்படும் இந்த ஆடம்பரப் பாதுகாப்புச் செலவுகள் தவிர்க்கப்பட்டிருக்க வேண்டிய ஒன்று என்பதே டெல்டா விவசாயிகளின் ஒருமித்த கருத்தாக உள்ளது.

இதற்கிடையே தொப்பூர் பகுதியில் விஜய்யின் பாதுகாப்பிற்காக பணியில் ஈடுபட்டிருந்த இரண்டு எஸ்.எஸ்.ஐ.க்கள் திடீரென்று மயக்கம் போட்டு விழுந்தனர். அவர்கள் உடனடியாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

---

### திருவண்ணாமலை மலையடிவாரத்தில்

## நூறாண்டுக்கு மேலாக குடியிருக்கும் 1,535 குடும்பங்களுக்கு பட்டா வழங்கிடுக!

### சட்டமன்றத்தில் கழக கொறடா எ.வ.வேலு வலியுறுத்தல்!

சென்னை, செப்.3-

சட்டமன்றத்தில் நேற்று தி.மு.க. சட்டமன்ற கொறடா ஏ.வ.வேலு அவர்கள் பேசியதாவது:-


பேரவை தலைவர் அவர்களே, இந்த அவையில் வருவாய்த்துறை அமைச்சர் கவனத்திற்கு நான் கொண்டு வருவது என்னவென்றால்,

திருவண்ணாமலை மாநகராட்சிக்கு உட்பட்ட திருவண்ணாமலை அடிவாரத்தில் உள்ள 1, 5, 6, 7, 14, 24, 25, 26 உள்ளிட்ட எட்டு வார்டுகள் உள்ளன. இங்கு பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகிறார்கள், இவர்கள் நூறாண்டுகளுக்கு மேலாக இங்கு குடி இருந்து வருகிறார்கள். தாங்கள் வசிக்கும் வீடுகளுக்கு பட்டா வேண்டும் என்று பலமுறை முயற்சித்தார்கள். நகராட்சி பகுதிகளில் பட்டா கொடுக்க தடை உள்ள காரணத்தால் அவர்களது கோரிக்கை நிறைவேற்றப்படாமல் இருந்தது.'

இந்நிலையில் கடந்த தி.மு.க. ஆட்சியில் திருவண்ணாமலை சட்டமன்ற உறுப்பினராக நான் இருந்த காரணத்தால் சட்டமன்றத்தில் அப்பகுதி மக்களுக்கு பட்டா வழங்க வேண்டும் என்று அப்போதைய முதலமைச்சரிடம் கோரிக்கை வைத்தேன். முதலமைச்சரும் அந்த கோரிக்கையை ஏற்று 21.2.2025 அன்று அரசாணை 97-இன் படி ஏற்கனவே இருந்த தடையாணையை நீக்கி பட்டா வழங்க உத்தரவிட்டார்கள்.

இந்நிலையில் யானை ராஜேந்திரன் என்பவர் மலையடிவாரத்தில் உள்ள மக்களை காலி செய்ய வேண்டுமென சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். அதன் அடிப்படையில் 1,535 வீடுகளை ஒரு மாதத்தில் காலி செய்ய வேண்டுமென வருவாய்த்துறை அதிகாரிகள் ஒரு அறிவிப்பு பலகையை வைத்தார்கள்.

அந்த 1,535 வீடுகளுக்கும் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக படிவம்7 வழங்கப்பட்டது. அதன் படி 1,535 அவர்களும் ஆக்கிரமிப்பாளர்கள் என்பதால் 30 நாளைக்குள் அவர்களாக காலி செய்ய வேண்டும், தவறினால் ஆக்கிரமிப்பு சட்டம் 1905 ன் படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மாவட்ட கலெக்டர் மூலம் நோட்டீஸ் வழங்கினார்கள்.



**பட்டா செய்ய தகுதி உள்ள இடம்!**

அவர்கள் வழங்கிய நோட்டீஸிலேயே வகைப்பாடு என்ற இடத்தில் சர்க்கார் புறம்போக்கு இடம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது, அந்த வகையில் இது பட்டா செய்ய தகுதி உள்ள இடம் என்பதால், பட்டா செய்து கொடுக்க அரசுக்கு அதிகாரம் உள்ளது.

மேற்கண்ட அந்த 1,535 குடும்பங்களுக்கும், அவர்கள் வசிக்கும் வீட்டிற்கு மாநகராட்சி வரி செலுத்துகிறார்கள், குடிநீர் இணைப்பு உள்ளது குடும்ப அட்டை, மின் அட்டை உள்ளது, ஆதார் அட்டை உள்ளது, பல்வேறு பொதுத் தேர்தல்களில் வாக்களிக்கும் வகையில் வாக்காளர் பட்டியல் பெயர்கள் உள்ளது. இவ்வளவு ஆதாரமும் இப்பகுதியில் வசிக்கும் மக்கள் வைத்துள்ளார்கள்.

இந்நிலையில் தற்பொழுது புதிதாக பொறுப்பேற்றுள்ள இந்த அரசு 27.8.2026 அன்று போடப்பட்ட அரசாணை எண் 663-இன் படி சிறப்பு வரன்முறைப்படுத்தப்பட்ட திட்டத்தின் கீழ் இங்குள்ள மக்களுக்கு வீட்டுமனை பட்டா வழங்கலாம் என்று அறிவித்துள்ளது.

இந்நிலையில் இப்பகுதியில் வசிக்கும் பாதிக்கப்பட்ட மக்கள் சார்பில் அண்ணாமலையார் மலையடிவார குடியிருப்போர் நல சங்கம் என்ற பெயரில் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று போட்டு உள்ளார்கள்.

**மக்களின் அச்சத்தைப் போக்க வேண்டும்!**

இந்த வழக்கு முடியும் வரை இங்கு வசிக்கும் மக்களுக்கு வீட்டை காலி செய்து விடுவார்களோ என்று அச்சமும் பதட்டமும் உள்ளது, எனவே அவர்களுடைய அச்சத்தையும் பயத்தையும் போக்கும் வகையில் அரசு போடப்பட்ட அரசாணையின் அடிப்படையில் அவர்களுக்கு பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும் உயர்நீதிமன்றத்தில் உள்ள வழக்கில் அரசு சார்பில் தங்களை இணைத்துக் கொண்டு வழக்காடி ஏற்கனவே திமுக அரசின் போது போடப்பட்ட அரசாணையையும் தற்பொழுது போடப்பட்டுள்ள அரசாணையையும் நீதிமன்றத்தில் எடுத்துரைத்து அங்கு குடியிருக்கும் மக்களுக்கு பட்டா வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை வருவாய்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

இவ்வாறு கழக கொறடா எ.வ.வேலு அவர்கள் பேசினார்.

---

#### உயர் கல்வித்துறை அமைச்சரிடம் ஒன்றிரண்டு முறை யோசித்து கேள்வி கேளுங்கள்!

## பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் நகைச்சுவை!

### பேரவையில் அனைவரும் ரசித்து சிரித்தனர்!

சென்னை, செப்.3-

சட்டப்பேரவையில் நேற்று கழக உறுப்பினர் அ.செ.வில்வநாதன் மாதனூரிலுள்ள புரட்சி தலைவர் எம்.ஜி.ஆர். அரசு கலைக் கல்லூரி மற்றும் அறிவியல் கல்லூரிக்கு விளையாட்டரங்கம் அமைத்துத் தர வேண்டும் என்பது குறித்து கவனஈர்ப்பில் கேட்டிருந்தார். இதற்கு பதில் அளித்த உயர் கல்வித்துறை அமைச்சர் நீண்ட பதிலளித்தார்.

அப்போது எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், “பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் ஒரு கோரிக்கை வைத்து கவனத்தை ஈர்த்திருக்கிறார். அறிவியல் கல்லூரிக்கு விளையாட்டு அரங்கம் வேண்டும் என்று உயர் கல்வித்துறை அமைச்சர் அவர்களுடைய பதில் எப்படி இருக்கிறது என்றால், அவசரப்பட்டு யாரும் எங்கிட்டே இனிமேல் எந்தக் கோரிக்கையும் வைக்காதீங்க. ஒன்றிரண்டு முறை யோசித்து கேள்வி கேளுங்கள் என்று சொல்வதைப்போல் இருக்கிறது” என்று நகைச்சுவையுடன் கூறினார்.

இதனால் பேரவைத் தலைவர் உள்பட பேரவையில் அனைவரும் ரசித்து சிரித்தனர்.

---

### ஜட்காபுரம், கல்யாணபுரம் பகுதியில்

## புதிய குடியிருப்புகள் கட்ட வேண்டும்!

### சட்டப்பேரவையில் பி.கே. சேகர்பாபு கோரிக்கை!

சென்னை, செப். 3-

சட்டப்பேரவையில் முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேசியதாவது:-

ஜட்காபுரம், கல்யாணபுரம் பகுதியில் ஏற்கனவே வசித்து வந்த குடியிருப்பாளர்கள் தண்ணீர் தொட்டி தெருவில் நகர்ப்புற மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் கட்டப்பட்ட 700 அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கு குடிபெயர்ந்ததால், அந்தப் பகுதிகளில் குடியிருப்புகள் காலியாக உள்ளன. எனவே, அப்பகுதியில் புதிய குடியிருப்புத் திட்டங்களை செயல்படுத்த வேண்டும் என்று சட்டப்பேரவையில் கோரிக்கை விடுக்கப்பட்டது.



ஜட்காபுரம், கல்யாணபுரம் பகுதியில் இருந்த குடியிருப்பாளர்கள் தண்ணீர் தொட்டி தெருவில் நகர்ப்புற மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் கட்டப்பட்ட 700 அடுக்குமாடிக் குடியிருப்புகளில் குடிபெயர்ந்துள்ளனர். இதனால் ஜட்காபுரம், கல்யாணபுரம் பகுதிகளில் உள்ள குடியிருப்புகள் பகுதி காலியாக உள்ளன.

ஏற்கனவே, மானியக் கோரிக்கையின்போது சென்னையில் 12,000-க்கும் மேற்பட்ட குடியிருப்புகள் கட்டப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. அந்தத் திட்டங்களின் கீழ் ஜட்காபுரம், கல்யாணபுரம் பகுதிகளிலும் புதிய குடியிருப்புகள் கட்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்

மேலும், தண்ணீர் தொட்டி பகுதியில் கூடுதலாக 140 குடியிருப்புகள் கட்டுவதற்கான பணிகள் தொடங்கப்பட்டிருந்த நிலையில், தற்போது அவை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. அந்தப் பணிகளை மீண்டும் தொடங்கி, குடியிருப்புகளை விரைவாகக் கட்டி முடிக்க முயற்சிகள் மேற்கொள்வீர்களா என்பதை பேரவை தலைவர் வாயிலாக அமைச்சர்கள் கவனத்தையும் அவையினுடைய கவனத்தையும் ஈர்த்து அமைகிறேன்.

இவ்வாறு சட்டமன்றத்தில் பி.கே.சேகர்பாபு அவர்கள் கவன ஈர்ப்பு தீர்மானத்தில் பேசினார்.

---

### பாதுகாப்பை குறைத்த த.வெ.க. அரசு!

## தளபதி மு.க.ஸ்டாலினுக்குத் தமிழ்நாட்டு மக்களே பாதுகாப்புக் கேடயமாக இருப்பார்கள்!

### திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி கண்டனம்!

சென்னை, செப்.3-

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும், தமிழ்நாட்டின் மேனாள் முதலமைச்சருமான தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த ‘இசட் பிளஸ்’ பிரிவு பாதுகாப்பு குறைக்கப்பட்டு இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இது அரசியல் உள்நோக்கம் உடையது மட்டுமன்று, சிறுமைக் குணமே ஆகும்.

60 ஆண்டுகளாகப் பொதுவாழ்க்கையில் இருந்து பல்வேறு பொறுப்புகளை ஏற்றுச் சிறப்பாகச் செயல்பட்ட ஒருவரின் மதிப்பை இத்தகைய செயல்களால் குறைத்து விட முடியாது.

அவருக்கு அரசின் பாதுகாப்பெல்லாம் பெரிதில்லை. அவர் ஆற்றியுள்ள மக்கள் தொண்டுக்கும், மக்களுக்கு நிறைவேற்றியுள்ள திட்டங்களுக்கும், திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் மட்டுமல்ல, நன்றிவுணர்வுடைய தமிழ்நாட்டு மக்களே தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களுக்குப் பாதுகாப்புக் கேடயமாக இருப்பார்கள்!

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---



மொழிப்போர் தியாகி, கழக மூத்த முன்னோடி கோவை மு.மா.சண்முகசுந்தரம் அவர்களின் 8ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு ஒருங்கிணைந்த கோவை மாவட்ட கழக அலுவலகத்தில் மாநகர் மாவட்ட கழகப் பொறுப்பாளர் துரை.செந்தமிழ்ச் செல்வன் தலைமையில் மாவட்ட கழக செயலாளர்கள் தொண்டமுத்தூர் அ.ரவி (கோவை வடக்கு), தளபதி முருகேசன் (கோவை தெற்கு), பொதுக்குழு உறுப்பினர் மு.மா.ச.முருகன் ஆகியோர் முன்னிலையில் அவரின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இதில் கழக சட்டத்துறை இணை செயலாளர் கே.எம்.தண்டபாணி, கழக தீர்மான குழு உறுப்பினர்கள் நாச்சிமுத்து, மு.இரா.செல்வராஜ், மாவட்ட துணை செயலாளர் கோட்டை அப்பாஸ், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பாலசுப்ரமணியம், பொதுக்குழு உறுப்பினர்கள் மணிகண்டன், கார்த்திகேயன், பகுதி கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள் வ.ம.சண்முகசுந்தரம், பசுபதி, ஆர்.எம். சேதுராமன், பாக்கியராஜ், கே.எம்.ரவி, சிவக்குமார், சிவராமன், தேவசீலன், ஏ.எஸ்.நடராஜ், கோவை லோகு, பாரதிநகர் செல்வராஜ், இராமச்சந்திரன், கோவை சம்பத், ஒன்னப்பன் உள்பட வட்டக் கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

---

#### கோவை, ஈரோடு, திருப்பூர், நீலகிரி ஒருங்கிணைந்த முன்னாள் மாவட்ட கழக செயலாளர்

## பி.ஏ.சாமிநாதன் துணைவியார் சம்பூரணம்சாமிநாதன் மறைவு!

### கழகத்தினர் அஞ்சலி!

ஈரோடு, செப். 3 -

ஈரோடு மாவட்டம் புஞ்சை புளியம்பட்டி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் ஒருங்கிணைந்த ஈரோடு, கோவை, திருப்பூர், நீலகிரி மாவட்ட செயலாளரும், கழக தொண்டருக்கு அரணாக நின்ற கழக மூத்த முன்னோடியும், மிசா காலத்தில் கழகத்திற்கு ஆதரவாக நின்ற பி.ஏ.சாமிநாதன் அவர்களின் துணைவியார் சம்பூரணம்சாமிநாதன் 1.9.2026 செவ்வாய்க்கிழமை இயற்கை எய்தினார் என்கிற செய்தியினை அறிவிக்க வருந்துகிறோம்.



சம்பூரணம்சாமிநாதன் நம்பியூர் ஒன்றிய முன்னாள் துணை தலைவராகவும், தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் இருந்தவர். 1977, 1980 ஆகிய தேர்தல்களில் பவானிசாகர் சட்டமன்ற தொகுதி வேட்பாளராக நின்றவர். 1976 மிசா காலத்தில் தலைவர் கலைஞர் அவர்களை அழைத்து வந்து தனது இல்ல திருமணத்தை நடத்தியவர். மிசா காலத்தில் பி.ஏ.சாமிநாதனுடன் சிறையில் இருந்த கழக தோழர்களின் குடும்பத்தினருக்கு மாதாமாதம் குடும்ப நிதி வழங்கி வந்தவர். மொழிப்போர் போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

அன்னாருக்கு டாக்டர் ராணி, வெற்றிசெல்வி, மணிமேகலை என்கிற மூன்று மகள்களும், பி.எஸ்.அன்பு என்கிற ஒரு மகனும் உள்ளனர்.

அன்னாரின் மறைவு செய்தியறிந்த மாநில, மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய, பேரூர், வார்டு, கிளைக்கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், அனைத்து கட்சி பிரமுகர்கள், கழக உடன்பிறப்புகள் பலர் அன்னாரின் உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.

அன்னாரின் இறுதிச் சடங்கு நேற்று (2.9.2026 புதன்கிழமை) மாலை 4.30 மணி அளவில் புளியம்பட்டியில் உள்ள அவரது தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டு இறுதி சடங்குகள் நடைபெற்றது.